**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி</u>**

<u>முன்னிலை : திரு.மு.ச.ஸ்ரீநாத்.,B.A.,B.L.,(Hons.) L.L.M.,</u>

<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி.</u>

<u>2026ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 24 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை</u>

**<u>இ.ம.எண்.2/2025 இன் அ.வ.எண்.162/2024</u>**

மஹர்நிஷா ... மனுதாரர்/பிரதிவாதி

/ எதிர் /

ஆசிக் அலி .... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனுவானது கடந்த 26.02.2026 தேதியன்று இறுதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.ராஜ்குமார் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் திரு.M.தாஹிரா அவர்கள் முன்னிலையாகியும், இதுநாள் வரையில் எனது கவனமான பரிசீலனையில் இருந்து வரும் வழக்காவணங்களை பரிசீலித்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**<u>ஆணையுரை</u>**

இம்மனுவானது அசல் வழக்கினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய உத்தரவு பிறப்பிக்குமாறு கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 7 விதி 11 பிரிவு 151ன்படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(2.1) மனுதாரர் தரப்பில், எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கானது பொய்யானது, சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல மேலும் தவறான சட்ட வழிகாட்டுதல்களின் காரணத்தினால் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட

பொய் வழக்காகும். திருமணத்திற்கு பெண்பார்க்க வந்த சமயத்தில் எதிர்மனுதாரரின் பெற்றோரும் அவரின் சகோதரியும் எதிர்மனுதாரர் பி.காம். பட்டப்படிப்பு முடித்துவிட்டுள்ளதாகவும், சூப்பர்வைசராக பணிபுரிந்து வருவதாகவும், மேலும் எதிர்மனுதாரரின் வேலை நிரந்தர வேலை என்றும் மேற்படி வேலையில் ரூ.50,000 சம்பாதித்து வருமானம் ஈட்டி வருவதாகவும் மேலும் எதிர்மனுதாரர் பெயரில் 5 செண்டில் சொந்தவீடு உள்ளது என்றும் திருமணத்திற்காக பொய்யாக கூறி திருமணம் செய்ததாகவும் ஆனால் திருமணத்திற்குப் பின்னிட்டுதான் மேற்படி கூறப்பட்டவை பொய் என்பது மனுதாரருக்குத் தெரியவந்ததாகவும் மனுதாரர் தெரிவிக்கிறார்.

(2.2) திருமணத்திற்குப் பிறகு எதிர்மனுதாரர் சிறுசிறு பிரச்சனைகளுக்கெல்லாம் சண்டையிட்டதாகவும், எதிர்மனுதாரர் அவருடை தாயார் மற்றும் சகோதரியுடன் சேர்ந்து மனுதாரரை ஒரு கைதியைப்போல் நடத்தியதாகவும், தன்னை குறை கூறி வரதட்சணையாக குறைவாக நகை போட்டுள்ளதையும் கேட்டு மிகுந்த மனஉளைச்சலுக்கு ஆளாக்கி வந்ததாகவும் தெரிவிக்கிறார். மேலும் எதிர்மனுதாரர் உடலளவிலும் மனதளவிலும் கொடுமைகள் செய்து ஒரு மனநோயாளியைப் போல திருமணவாழ்வில் நடந்து வந்ததாகவும், மேலும் எதிர்மனுதாரரின் சகோதரியும் தாயாரும் மனுதாரரை பலவழிகளில் கொடுமைகள் செய்து வந்ததாகவும் மனுதாரர் தெரிவிக்கிறார். மேலும் தனது தாய் மற்றும் தந்தையை அவமானப்படுத்தும் வகையில் எதிர்மனுதாரர் மற்றும் குடும்பத்தினர் நடந்து கொண்டதாகவும், மேலும் எதிர்மனுதாரர் தன் வழக்குரையில் பத்தி 8ல் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளின்படி இந்த பிரச்சனைகளின் பின்னிட்ட 10 நாட்கள் பெற்றோருடன் சென்று திரும்பி வந்ததாகவும், அதனைத் தொடர்ந்து 1 ½ வருடங்கள் மனுதாரர் அவரின் பெற்றோர்

வீட்டில் இருந்ததாகவும், எதிர்மனுதாரர் பலமுறை நேரிலும் அலைபேசியிலும் அழைத்தும் மனுதாரர் வாழவராமல் இருந்ததாகவும் அதன் பின்னிட்டு ஜமாத்தார்கள் எதிர்மனுதாரரிடம் தனிக்குடித்தனம் இருக்குமாறு அறிவுரை கூறியதற்கு எதிர்மனுதாரர் தனிக்குடித்தனம் செல்ல மறுத்ததாகவும் மேலும் தனக்கென்று ஒரு ரூபாய்கூட எதிர்மனுதாரர் செலவு செய்ததில்லை என்றும் தெரிவிக்கிறார்.

(2.3) மேலும் எதிர்மனுதாரர் பல உண்மைகளை மறைத்து பொய்யாக பல சங்கதிகளை புனைந்து இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்றும் மனுதாரர் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழவே விரும்புவதாகவும், எதிர்மனுதாரரின் பெற்றோர்களே எதிர்மனுதாரருக்கு தவறான வழிகாட்டுதல்கள் வழங்கி மனுதாரரை எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழாத வண்ணம் நடத்தி வருவதாகவும், எதிர்மனுதாரர் தனிக்குடித்தனம் வந்து வாழும்பட்சம் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழவே முற்படுவதாகவும் எனவே எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(3) எதிர்மனுதாரர் தரப்பில், மனுதாரரின் மனு சரியல்ல. சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. எவ்வகையிலும் நிலைநிறுத்தத்தக்கதல்ல. மனுதாரர் தன் மனுவில் தனது படிப்பு மற்றும் வருமானம் குறித்து கூறியவைகள் அனைத்தும் பொய் என்று கூறியுள்ளது தவறாகும். திருமணத்திற்கு முன்பே அதுகுறித்து மனுதாரரிடம் தெரிவித்ததாக எதிர்மனுதாரர் தெரிவிக்கிறார். மேலும் தான் தனது சகோதரி மற்றும் தாயாருடன் சேர்ந்து மனுதாரரை கொடுமைப்படுத்தியதாக சொல்வது பொய் என்றும் தான் உடலளவிலும்

மனதளவிலும் மனுதாரரை மன உளைச்சலுக்கு ஆளாக்கினார் என்று மனுதாரர் கூறுவது பொய் என்றும் மேலும் தன்னுடன் சேர்ந்து வாழ மனுதாரர் விரும்புவதாக கூறுவதும் பொய் என்றும் மேலும் மனுதாரரின் குடும்பத்தினர் தனது பெற்றோரை மிகவும் மனவேதனைக்கும் துன்பத்திற்கும் ஆளாக்கினார்கள் என்றும் ஆகையால் இனி மேற்கொண்டு மனுதாரரும், எதிர்மனுதாரரும் சேர்ந்து வாழமுடியாத சூழ்நிலைகள் உள்ளதால் மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 28.12.2022ம் தேதி நடைபெற்ற நிக்காஹ் (எ) திருமணம் செல்லாது என விளம்புகை செய்ய தகுந்த உத்தரவு பிறப்பிக்க வேண்டுமாய் எதிர்மனுதாரர் பிரார்த்திக்கிறார்.

4) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

5) இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

6) இருதரப்பு கட்சிகளும் கேட்டு வழக்காவணங்களை பரிசீலிக்கும்போது மனுதாரர் எதிர்மனுதாரர் பல உண்மைகளை மறைத்து பொய்யான சங்கதிகளை புனைந்து வழக்கைத் தாக்கல் செய்துள்ளதாகவும் தான் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ விரும்புவதாகவும், அதனால் வழக்குரையை நிராகரிக்க கோரியுள்ளார். எதிர்மனுதாரரின் வழக்குரை சங்கதிகள் சரியானதா அல்லது பொய்யானதா என்பதை முழுமையான வழக்கு விசாரணைக்கு பின்பே தீர்மானிக்க இயலும். அதனை இம்மனுவில் தீர்மானிக்க இயலாது. மேலும் மனுதாரர் எதிர்மனுதாரருடன் வாழ விரும்புவதாக கூறுவது மட்டுமே

வழக்குரையை நிராகரிக்க போதுமானதாகாது. இம்மனுவில் மனுதாரர் கூறியுள்ள சங்கதிகளை அவர் தன் வழக்கு விசாரணையில்தான் நிரூபிக்க வேண்டும். எனவே மனுதாரர் இம்மனுவில் செய்துள்ள கட்சி எதுவும் உ.வி.மு.ச கட்டளை 7 விதி 11–ன்படி வழக்குரையை நிராகரிக்க போதுமானதாக இல்லை என இந்நீதிமன்றம் காண்கிறது. எனவே இம்மனுவானது தள்ளுபடிக்குரியது என இந்நீதிமன்றம் காண்கிறது.

**முடிவில், இம்மனுவானது தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.**

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026ம் ஆண்டு மார்ச் மாதம் 24ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SREENATH M S

Digitally signed by SREENATH M S
Date: 2026.03.24 18:19:56 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :</u> இல்லை

<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u> இல்லை

SREENATH M S

Digitally signed by SREENATH M S
Date: 2026.03.24 18:20:05 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

---------------------------------------

**அசல் / வரைவு ஆணையுரை**

இ.ம.எண்.2/2025 இன் அ.வ.எண்.162/2024

நாள் : 24.03.2026

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

பொள்ளாச்சி.

---------------------------------------

IA.2/2025 in O.S.162/2024 Dt: 24.03.2026 Adm, Poy